மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: ஒரு பிரச்சினை மீது பேரவைத்தலைவர் தீர்ப்பு அளித்த பிறகு அதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வது தான் முறையேயொழிய அதன்மீது விவாதத்தை எழுப்புவது முறை அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையின் நடவடிக்கைகுக் குந்தகம் ஏற்படாமல், கண்ணியக் குறைவு ஏற்படாமல், விதிமுறைகளை ஒழுங்கு முறைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.
சிவகாசியில் நெல் மண்டிகள் கதவடைப்பு.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி: கனம் பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள, சிவகாசியில் திராவிட முன்னேற்றக் கழக அங்கித்தினர்கள் சிலர் பதுக்கி வைக்கப்பட்ட நெல்லைக் காட்டிக்கொடுத்து, அதன்பேரில் பதுக்கி வைக்கப்பட்ட நெல் கைப்பற்றப்பட்டது என்ற காரணத்திற்காக, மண்டிகளை மூடி, நெல் வியாபாரத்தை நிறுத்தி, அப்பகுதி மக்களைப் பட்டினியால் பரிதவிக்கவிட்டு, அதன்மூலம் கழக ஆட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாக்கும் நோக்கத்துடன், சிவகாசியில் உள்ள வணிகர்கள், அங்குள்ள எல்லா மண்டிகளையும் கடந்த ஆறு தினங்களாக மூடிவிட்டதால், சிவகாசியிலும் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமப் பகுதியிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள், உணவு கிடைக்காமல் பரிதவித்துப் பஞ்சத்தின் பிடியில் அகப்பட்டுள்ளார்கள். அதனால் அங்கு பெரும் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மற்ற இடங்களுக்கும் பரவலாம். இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர விஷயத்தை விவாதிக்கவும் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்துவைக்க வேண்டுகிறேன்" என்ற தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரால் குறிக்கப்பட்டுள்ள காரியம் அரசினரின் அன்றாட சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டு இருக்கிறது. இரண்டாவது, கவர்னர் உரையின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இதுபற்றிப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களுக்காகவும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் பேரவையின் 41-வது விதிப்படி கொடுத்துள்ள அறிவிப்பு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் அதற்கு நான் அனுமதி வழங்கியுள்ளேன்.